Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.No.109/2018, Cr.No.268/2017, Tirupathur Taluk PS.**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.11, Page.No.

| | |
|---|---|
| பெயர் | உலகநாதன் |
| வயது | 53 |
| தந்தை பெயர் | சன்னியாசி |
| தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | வடமாதிமங்கலம் |
| மாவட்டம் | திருவண்ணாமலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 25th day of June 2026.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- (எதிரிகள் ஆஜர்)**

நான் தற்போது ஆற்காடு நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிர்மலா மேல் விசாரணைக்காக என்னுடையப் பார்வைக்கு வைத்த வழக்குக்கோப்பைப் பெற்றுக்கொண்டு நான் கடந்த 09.05.2017 அன்று மாலை 19.45 மணியளவில் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் சசிக்குமார் மற்றும் தருமன் ஆகிய சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கடந்த 19.05.2017 அன்று காலை 10.00 மணியளவில் வெங்களாபுரம் கூட்ரோட்டிடம் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, திருவண்ணாமலை மார்க்கமாக திருப்பத்தூர் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்தை நிறுத்தி சோதனை செய்தபோது, மேற்படி பேருந்தில் இருந்த தப்பி செல்ல முயன்றவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள்

தினகரன் மற்றும் சுகுமார் முன்னிலையில் பதிவு செய்தேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி வெங்கடேசனிடமிருந்து அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 3 சவரன் தங்க முறுக்கு சங்கிலியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **வழக்கு சொத்தான 3 சவரன் மதிப்புள்ள முறுக்கு சங்கிலி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் தினகரன் மற்றும் சுகுமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்த வேண்டி கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம்–91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம்–91 அ.சா.ஆ.17–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கடந்த 22.09.2017 அன்று மாலை மாலை 16.00 மணியளவில் வெங்களாபுரம் கூட்ரோட்டிடம் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, திருவண்ணாமலை மார்க்கமாக திருப்பத்தூர் நோக்கி TVS Super XL என்ற வாகனத்தில் வந்தவர் எங்களை கண்டதும் தப்பி செல்ல முயன்றவரை மடக்கி பிடித்து விசாரித்தபோது, அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பெருமாள் மற்றும் சுகுமார் முன்னிலையில் பதிவு செய்தேன். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரி மாதுவின் வீட்டின் பின்புறம் இருந்து அன்றைய தினமே 17.30 மணியளவில் பதிவெண் தெரியாத சிவப்பு நிற Hero Honda Passion Pro வண்டியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **வழக்கு சொத்தான சிவப்பு நிற Hero Honda Passion Pro வண்டி அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் பெருமாள் மற்றும் சுகுமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து நீதிமன்றக்காவலுக்கு உட்படுத்த வேண்டி கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் படிவம்–91 மூலம் வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம்–91 அ.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கில் காயமுற்ற அருணாதேவிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.சிவக்குமாரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவருடைய வாக்குமூலத்தில் மேற்படி அருணாதேவிக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்று வழங்கியுள்ளார். பின்னர் இவ்வழக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திருமதி.நிர்மலா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.09.2017 அன்று இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 392–ன் கீழ் இறுதியறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

புகாரில் எதிரிகள் குறித்து விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், இரண்டு நபர்கள் என்று கூறியுள்ளார். இந்த வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரர், நகையானது சம்பவத்தின் போது அறுபட்டதாக கூறியுள்ளார் என்றாலும், வழக்கு சொத்தாக முழுமையான நகையினை நான் ஆஜர்படுத்தி உள்ளேன் என்றால் சரிதான், எதிரியானவர் அதை முழுமையாக தயார் செய்துள்ளார். இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் சம்பவயிடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரி மீது புள்ளி விவரக் கணக்கிற்காக தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.